
# கல்வாரியில்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# ஓ, நான் அந்த பரபாஸாயிருந்தேன். மரிக்கிறதற்கு பாத்திரவானாயிருந்தவன் நான், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1211M — பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

284. அவர்கள் உமது முகத்தில் காரி உமிழ்ந்து, உம்மைச் சுற்றி நின்று அடித்த போது, உம்மில் கசப்பின் வேர் எதுவுமே இல்லை. அவர் அவர்களை உற்று நோக்கி விட்டு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார். அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதைப் பாருங்கள்.

285. அதை உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறதா? அவரது இரத்தத்தை சிந்த வேண்டுமென்று, அவரது

சொந்தப் பிள்ளைகளே கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர்.

வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவர், பூமியிலிருந்து அவர் முளைத்தெழும்பச் செய்த மரத்தினால் உண்டாக்கப்பட்ட சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார்; அவரது சொந்தப் பிள்ளைகள்!

(பிதாக்களே, உங்கள் பிள்ளைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள், உங்கள் சொந்தப் பிள்ளைகள்). அவருக்கெதிராகக் கூக்குரலிட்டு, "அவனை அகற்றும், கள்ளனாகிய அந்தப் பரபாஸை விடுதலையாக்கும்" என்றார்கள்.

286. ஓ, நான் அந்த பரபாஸாயிருந்தேன். மரிக்கிறதற்கு பாத்திரவானா

யிருந்தவன் நான், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்.

சிறையில் அந்த பரபாஸ் என்பவன் இருந்த பொழுது, அங்கே அந்த நூற்றுக் கதிபதி மிகுந்த ஓசையோடு நடந்து வந்து கதவைத் திறந்தபொழுது, பரபாஸ் எவ் வாறு சிந்தித்துக் கொண்டிருந்திருப்பான்?

"இன்னும் சிறிது நேரத்தில் நான் மரித்துப்போய்விடுவேன், நான் ஒரு கொலைக்காரன், நான் ஒரு திருடன். இன்று என்னை அவர்கள் கொன்றுவிடப் போகி றார்கள். அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்பதை அறிவேன். இன்று பஸ்கா தின மாகும், எனவே நான் உண்மையிலேயே... நான் இன்று மரிப்பேன் என்று அறிவேன்" என்று பரபாஸ் தனக்குள் சொல்லிக் கொண் டிருந்தான்.

முந்தின இரவு முழுவதும் நடுங்கினவனாக காணப்பட்டான். நிம்மதியற்ற எந்தவொரு பாவியையும் போல அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான்.

முதலாவதாக, அங்கே அந்த காவலாளி வருகிறான். அப்பொழுது பரபாஸ், "ஓ, ஓ, இதோ இவன் வந்துவிட்டான், நான் போய்விடவேண்டும்" என்றான்.

அப்பொழுது சாவியைப் போட்டு க்ளிக் என்று காவலாளி கதவைத் திறந்தான்.

காவலாளி அட்டென்ஷனில் நின்று, "பரபாஸே, வெளியே வா" என்று அழைத்தான்.

"ஊ ஊ, ஆம், நான் போகவேண்டும் என்பதை அறிவேன். நான் போய்க்கொண் டிருக்கிறேன்" என்றான் பரபாஸ்.

"நீ போகலாம், உனக்கு விருப்பமான படி செய்துகொள்ளலாம்" என்றான் காவ லாளி.

"என்ன? " என்றான் பரபாஸ்.

"நீ விடுதலையாயிருக்கிறாய், நீ வெளியே போகலாம், நீ போய் உனக்கு விருப்பமானபடி செய்து கொள்" என்றான்.

287. "நான் விடுதலையாகிவிட்டேனா? நீரல்லவா எனக்கு மரண தண்டனை அளித்தீர்" என்றான்.

தேவன் அனைத்து பாவிகளையும் மரணாக்கினைக்குள்ளாக்குகிறார்.

"நீர் எனக்கு மரண தண்டனை விதித் துள்ளீரே, அப்படியிருக்க நான் எப்படி விடுதலையாகி போகமுடியும்?" என்று பரபாஸ் கேட்டான்.

288. "இங்கே வா பரபாஸ், அதோ அங்கே அவர் அந்த மலையின் மேல் ஏறிச் செல்வதைப் பார், சிலுவை கல்லின் மேல் மோதும் போது உண்டாகும் சத்தத்தைக் கேள். அவருடைய கைகளில் அவர்கள் ஆணியறைவதனால் உண்டாகும் சத்தத் தைக் கவனி, அங்கே கதறுகிற அவரை நோக்கு, அவர் முகத்தில் உப்பான கண் ணீரும், இரத்தமும் கலந்து காணப்படு கிறதை பார். பரபாஸே, உனது ஸ்தா னத்தை அவர் எடுத்துக்கொண்டார். அவர் உனக்காக மரித்தார்"

"நான் விடுதலையாவதற்காக அவர் மரித்தார் என்றா கூறுகிறீர்கள்"

"ஆம்"

289. "ஓ நல்லது, நான் மறுபடியும் கொலை செய்ய ஆரம்பிப்பேன்." ஓ, என்னே ஒரு நன்றியற்றவன் நீ, நீ மரிப் பதற்கு பாத்திரமானவன்.

290. மகிமையின் அதிபதி மரித்த அவ் வற்புத சிலுவையை நான் காண்கையில், என்னுடைய பெருமையெல்லாம் வீண் நஷ்டம் தான். ஓ, என்னே! கவிஞன் இவ்வாறு பாடியது ஒன்றும் ஆச்சரியம் அல்ல.

*அவர் உயிரோடிருந்து என்னை நேசித் தார், மரித்து என்னை இரட்சித்தார்,*

*அடக்கம் பண்ணப்பட்டு, அவர் என் பாவங்களை சுமந்து தொலைவில் அகற்றி னார்,*

*உயிர்த்து, இலவசமாக என்னை என் றென்றைக்குமாக நீதிமானாக்குகிறார்*

*ஓர் நாளில் அவர் வருவார், ஓ அது மகிமையான நாளாயிருக்கும்.*

291. அவர் எனக்காக செய்ததை நான் காண்கையில், அவரை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? நான் எங்ஙனம் அதைச் செய்வேன்?

பூமியில் எனக்குள்ள நபர் யாவரையும் இழந்துவிட நான் விரும்புவேன்.

ஸ்தாபனங்களால் நான் உதைத்து எறியப் படவும், யாவற்றாலும் உதைத்து எறியப்படவும் ஆயத்தமாயிருப்பேன்.

நான் அங்கே நோக்கிப் பார்க்கையில், நான் மரணாக்கினைக்குள்ளாக்கப்பட்டிருக் கையில், அவரோ என்னுடைய ஸ்தா னத்தை எடுத்துக்கொண்டுவிட்டார்.

நிச்சயமாக, கர்த்தாவே, யாற்றையும் வீண் நஷ்டமென்று நான் எண்ணுகிறேன்.

ஓ, நான் சிலுவையை தழுவிக்கொள் ளட்டும். கர்த்தாவே.

*கன்மலைகள் இரண்டாகப் பிளந்தன, ஆகாயங்கள் இருண்டன,*

*இரட்சகர் தலையை சாய்த்து மரித்தார், அப்பொழுது*

*திரைச்சீலை கிழிந்து வழியை வெளிப் படுத்தியது*

*பரலோகத்தின் மகிழ்ச்சிக்கும், முடி வற்ற நாளுக்கும்.*

292. ஓ, இயேசுவே, நான் உம்மண்டை யில் நெருங்கி தங்கியிருக்கட்டும்.

உமது பக்கத்திலிருந்து என்னை அகற்றி விடாதேயும், இரத்தம் வடியும் உமது ஐங்காயங்களை நான் காணட்டும். ஓ பரலோகத்தின் அதிபதியே! எப்படியாக அவர் எனக்காக மரித்தார்! நான் பிழைக் கும்படியாக அவர் மரித்தார்.

293. ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட ஒருவன்... பாவ சங்கிலியால் நரகத்தின் சிறையில் வைக்கப்பட்டிருந்த, ஆக்கினைக் குட்படுத்தப்பட்ட, குற்றமுள்ளவனாக, என்

றென்றும் அழிந்துபோயிருக்கும் படியாக இருந்தேன். ஒருவர் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். அதன்பிறகு அவர்கள்...

இங்கே நான் 18 அல்லது 20 வயதினனாக இருக்கையில், ஒரு நாளிலே பரிசுத்த ஆவியானவர்... நான், "நான் யார், நான் எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன்?" என்று கூறினேன்.

294. அவர் கூறினார், "அவர் உனது ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். நீ அங்கே போய்க் கொண்டிருந்தாய். அவர் உன் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். அவர் அங்கே இருக்கிறார்" என்று .

295. "ஓ தேவ ஆட்டுக்குட்டியே, ஓ தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்,

நான் வருகிறேன். வெறுங்கையனாக நான் வருகிறேன், உமக்குக் கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை. உம்முடைய சிலுவையை நான் பற்றிக்கொள்கிறேன். கர்த்தாவே, என்னிடம் இருப்பதெல்லாம் அது மாத்திரமே" என்று நான் கூறினேன்.

அவர் என்னை உள்ளே எடுத்துக் கொண்டார்.

கெட்ட குமாரனை அவனது தந்தை உடுத்துவித்தது போல், என்னையும் உடுத்துவித்தார்.

புத்தாடையை எனக்கு உடுத்துவித்தார்.

அது என்னுடைய ஆடையல்ல, அது அவருடைய நீதியாகிய வஸ்திரமே, அதைக் கொண்டு என்னை உடுத்துவித்தார்.

ஒரு விவாக மோதிரத்தை, அந்நாளில் நான் மணவாட்டியோடு இருக்கத்தக்கதாக, என் விரலில் அணிவித்தார்.

இப்பொழுது கொழுத்த கன்று அடிக்கப்பட்டிருக்கிறது.

நாம் இப்பொழுது களிகூர்ந்து கொண்டிருக்கிறோம், ஏனெனில், நான் முன்பு மரித்திருந்தேன், இப்பொழுதோ உயிர்த்து விட்டேன். காணாமற்போனேன், இப்பொழுதோ கண்டுபிடிக்கப்பட்டேன்.

*ஆச்சரியமான கிருபை, அதன் சப்தம் இனிமையானது,*

*அது பாவியான என்னையும் இரட்சித்தது* (பரபாஸை விட மோசமான நான்)

*நான் காணாமற்போனேன், இப்பொ ழுதோ கண்டு பிடிக்கப்பட்டேன்.*

*நான் குருடனாயிருந்தேன், இப்பொ ழுதோ காண்கிறேன்.*

*பயந்திருக்க எனக்குப் கற்பித்தது கிரு பையே*

*அச்சம் யாவும் தீர்த்ததுவும் கிருபையே*

*நான் முதலில் விசுவாசித்த வேளை யிலே*

*கிருபையானது எத்தனையாய் விலை யேறப் பெற்றதாய் காணப்பட்டது!*

*பதினாயிரம் ஆண்டுக் காலங்களாக நாம் அங்கே இருக்கிற வேளையில்,*

*சூரியனைப் போல் பிரகாசமாயிருந்த*

(இனி நட்சத்திரங்களே இல்லை, ஆனால் சூரியன்தான்)


*நாம் ஆதியில் ஆரம்பித்ததை விட,*

*அவரைத் துதித்துப் பாடிட நமக்கு நீண்ட காலம் உண்டாயிருக்கும்*

(நாம் அப்பொழுது நித்தியத்தில் இருக் கிறோம்).

296. ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன். ஏனெனில் அவர் என்னில் முந்தி அன்பு கூர்ந்தார். ஓ எவ்வளவு அற்புதமானது!

# பிலாத்து



## செய்தி: 53-03-27 இஸ்ரவேலும் சபையும் #3

73. நீங்கள், "நல்லது, அவருடைய நண்பர்கள் சாட்சி பகருவார்கள். அவருடைய சத்துருக்களைக் குறித்து என்ன? என்று கேட்கலாம்.

74. நாம் பிலாத்துவை அழைப்போம். அவன் ஒரு உலோகத்தட்டை எடுத்து, தன்னுடைய கைகளைக் கழுவின பிற்பாடு, அவன், "நான் இவனிடத்தில் எந்த குற்றத்தையும் காணவில்லை, ஆனால் இவனை அகற்றி விடுகிறேன், உங்களுக்கு விருப்பமான எதையும் செய்யுங்கள்" என்று கூறி,

அவன் அரசியல் அநுகூலம் கிடைக்கும்படியாக முயற்சித்துக் கொண்டிருந்தான், பிறகோ அவன், அங்கே நார்வேயில், சுவீடனில் தன்னைத்தானே மூழ்கடித்து மாண்டு போனான். மீண்டுமாக நீர்க்குமிழிகள் மேலே கொப்பளித்து வரும் அந்த நீல நிற தண்ணீரைப் பார்க்கும்படியாக அவர்கள் ஒவ்வொரு வருடமும் அங்கே போகும் போது, அவன் கிறிஸ்துவிடமிருந்து தன்னுடைய கரங்களைக் கழுவின தண்ணீர் அதுதான் என்று அவர்கள் உரிமை கோருகிறார்கள். உங்களால் அவரை உங்கள் கரங்களிலிருந்து கழுவிப்போட முடியாது. இல்லை, ஐயா, உங்களால் முடியாது.

75. நான் ரோம நூற்றுக்கதிபதியை நோக்கிப் பார்த்து, "நீ அவரைக் குறித்த

என்ன நினைக்கிறாய்? நீ அவருடைய சத்துருக்களில் ஒருவனாயிற்றே" என்று (கேட்பேன்) என்றால்.

76. அவன் தன்னுடைய கரத்தை தனது இருதயத்தின் மேல் வைத்து, "மெய்யா கவே அவர் தேவனுடைய குமாரன்" என்று கூறினான்.

பிலாத்து, "இவனிடத்தில் நான் எந்த குற்றத்தையும் காணவில்லை என்று கூறி னான்.

77. முதலாவது, அவன் அங்கே மிக மோசமானவனாக நின்று கொண்டிருந் தான், ஓ, அவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவும் மற்றும் எல்லாவற்றையும் செய்ய ஆயத்தமாக இருந்தான்.

அப்போது ஒரு குதிரை தெருவில் வேகமாக ஓடிவரும் சத்தம் கேட்கிறது, இதோ ஆலயக் காவலர்களில் ஒருவன் வருகிறான்.

அவன் குதிரையை விட்டு கீழே குதித்தான்.

அவனிடம் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு துண்டு கடிதம் இருந்தது.

அவன் மேலே ஓடி பிலாத்துவுக்கு முன்பாகப் போய், தலை வணங்கி, அந்த துண்டு கடிதத்தை அவனிடம் கொடுத்தான்.

பழங்கால பிலாத்து அதை வாங்கி னான், அது உங்களுக்குத் தெரியும்.

அது ஒருவிதத்தில் அதிகாலையாக இருந்தது, அவன் இன்னும் தன்னுடைய காபியை அருந்தியிருக்கவில்லை.

அவன் அங்கே எழுந்து நின்று, (அதை) நோக்கின போது, அவன் வெளிறிப்போகத் துவங்கி, அவனுடைய முழங்கால்கள் ஒன் றோடு ஒன்று முட்டிக்கொண்டன.

நாம் அவனுடைய தோள்பட்டையி னூடாக உற்றுப் பார்த்து, என்ன விஷயம் என் பார்ப்போம்.

அந்தத் துண்டு கடிதத்தில் என்ன எழுதி யிருந்தது, அவனுடைய அஞ்ஞான மனைவி, இந்த நீதிமானுக்கு எதையும் செய்து விடாதீர்கள், அவர் நிமித்தம்

இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடு பட்டேன்” என்று கூறியிருந்தாள்.

“பழங்கால யூதாஸ்காரியோத்தே, நீ அவரைக் குறித்து என்ன நினைக்கிறாய்?”


78. அவன், "குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து விட்டேன்” என்று கூறி விட்டு, ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு போய் தனக்குத்தானே தூக்கிலிடும்படிக்கு (நான்றுகொள்ள) போதிய மனிதனாக அவன் இருந்தான். அவன் சோதனை செய்யப்பட்டான்.

---

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)

---

ஆனால் வலது பக்கத்திலிருந்த கள்ளன் அவரைப் புரிந்து கொண்டு, “நாம் தீமை செய்தோம், நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம், ஆனால் இந்த மனிதனோ ஒன்றுமே செய்யவில்லையே” என்றான். “ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்” என்றான்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-07-23E தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல் COD #14

222. அந்த சீஷர்கள் கல்வாரியில், அவர்களெல்லாரும் அவரை மறுதலித்து சென்ற போது, அவர்கள் தவறாக புரிந்து கொண்டிருந்தனர். அற்புதங்களைச் செய்து மரித்தோரை எழுப்பின ஒரு மனிதனாக அவர்கள் அறிந்திருந்த இவர் தம்மையே மரணத்திற்கு அற்பணித்து, அதினூடாக நடந்து சென்று, அடிக்கப்பட்டு, அழுது கொண்டு, முகம் முழுவதுமாக எச்சில் வடிந்து கொண்டு, அவர்கள் அவருடைய முகத்திலிருந்து கைநிறைய தாடி பிடுங்கி எடுத்த போது வந்த இரத்தம் எச்சிலோடு கலந்தது; அவருடைய முதுகை எலும்புகள் வெளியில் தெரிந்து பளபளக்கும் வரை

சாட்டையால் அடித்தனர், எதற்கும் கவலை கொள்ளாத, குடி போதையில் இருந்த போர் சேகர்கள், அவரை தெருவில் அடித் துக் கொண்டிருந்தனர். “எப்படி இவர் அவர்கள் இவ்விதமாக செய்ய விட்டு விட்டாரே?” என்று நினைத்து அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு தூரத்திலேயே நின்று விட்டனர். அது சரி.

223. பிசாசும் அவரை தவறாக புரிந்து கொண்டான். பிசாசும், “அங்கே மிக மோச மாக நடத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்ற அவர் நிச்சயமாக தேவனுடைய குமார னாக இருக்க முடியாது, ஏனெனில் என் சீடர்கள் அவரை சபித்துக் கொண்டு எல்லா விதத்திலேயும் மோசமாக நடத்திக் கொண் டிருக்கும்போது, அவரும் அதை ஏற்றுக் கொண்டு அப்படியே இருக்கின்றாரே. அவர் தேவனுடைய குமாரன் அல்ல” என்று கூறினான்.

224. பரிசேயரும், ஆசாரியர்களும் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு, “நீ தேவனுடைய குமாரனானால், அங்கிருந்து கீழே இறங்கி வா” என்றனர்.

225. அவருக்கு இடது பக்கத்திலிருந்த கள்ளன் அவரை தவறாகப் புரிந்து கொண்டு, “நீர் தேவனுடைய குமாரனா னால், நம்மெல்லாரையும் சிலுவையி லிருந்து எடுத்துப் போட்டு உன்னை இரட்சித்துக்கொண்டு எங்களையும் கூட இரட்சியும்.” என்று கூறினான்.

226. ஆனால் வலது பக்கத்திலிருந்த கள்ளன் அவரைப் புரிந்து கொண்டு, “நாம் தீமை செய்தோம், நாம் நடப்பித்தவை களுக்குத்தக்க பலனை அடைகிறோம், ஆனால் இந்த மனிதனோ ஒன்றுமே செய் யவில்லையே” என்றான். “ஆண்டவரே, நீர்

உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்” என்றான்.

227. “நிச்சயமாக நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்.” திரும்பி வந்த அந்த சத்தத்தை கவனியுங்கள், நம்முடைய பாவங்களுக்காக மரித்துக் கொண்டிருக்கிற தேவன் அவர் என்பதை அவன் புரிந்து கொண்டான். அவர் மரிக்கக் கூடிய ஒரே வழி, மாம்சத்திலே மரணத்தில் ஆழ்த்தப் படுவதே. ஆவியிலே அவரை மரிக்கச் செய்ய முடியாது, ஏனெனில் அவர் தான் அந்த நித்திய ஆவி. ஆகவே அவர் மரிக்கும்படியாகச் செய்யப் படத்தக்கதாக அவர் மாம்சத்தில் இருந்தாக வேண்டும், ஆகவே அவரை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். அவனோ அதைப் புரிந்து கொண்டான்.

# அவரோ, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-10-14M ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி

இந்த தன்னடக்கத்தை கூட சேர்த்துக் கொள். உன்னிடம் யாராகிலும் கடும் கோபமாக பேசும் போது, சாந்தமாக எவ்விதம் பதிலளிக்க வேண்டுமென்பதே தன்னடக்கமாயிருக்கின்றது. யாராவது உங்களைப் பார்த்து, "நீங்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள்'' என்று கூறும் போது, உடனே உங்கள் கைச்சட்டையை சுருட்டி விட்டுக்கொண்டு அவர்கள் மேல் பாய்வது அல்ல. பாருங்கள்? அது அல்ல. அதற்கு மாறாக தேவ அன்போடும்; சாந்தத்தோடும் தயவோடும் பேசுவதே காரியமாகும்.

அவ்வாறு நீ இருக்க விரும்புகிறாயா? (சபையார், ''ஆமென்,'' என்று கூறுகிறார்கள் - ஆசி) யாராகிலும் உன்னை கோபமூட்டும் போது, நீ திரும்பிக் கோபப் படாதே. கிறிஸ்துவை உன்னுடைய உதாரணமாக வைத்துக்கொள்.

224. ''நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்'' என்று பிசாசு கூறினான். அவர் அவ்விதமே செய்து தம்மை தேவன் என்று காண்பித்திருக்க முடியும். ஆனால் அங்கு அவர் தன்னடக்கமாயிருந்தார். அவரை அவர்கள், ''பெயல் செபூல்'' என்று அழைத்த போது, அதை அவர்களுக்கு மன்னித்தார். அது உண்மையா? அவருடைய தாடியின் மயிரைப்

பிடித்திழுத்து முகத்தில் துப்பினார்கள், ''சிலுவையை விட்டு கீழே இறங்கி வா'' என்று கூறினார்கள்.

225. அவரோ, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார்.

226. அவருக்குள் வரமானது இருந்து .... தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் இருந்ததால், அவருக்கு எல்லாம் தெரிந்திருந்தது. ஜனங்களுக்குள் தப்பிதம் என்னவென்றும் மற்றவற்றையும் அவர் எடுத்துக் கூறி, அற்புதங்களை அவர் செய்வதை ஜனங்கள் கண்டார்கள். இருந்தாலும், அவர்கள் அவர் தலையில் முள் முடியை வைத்து அடித்து,

அவர் கண்களை கந்தைத் துணிகளால் மூடி, "உன்னை அடித்தவன் யார் என்று கூறும்; அப்பொழுது நாங்கள் விசுவாசிப் போம்" என்றார்கள். பாருங்கள்? அவர் தன்னடக்கமாயிருந்தார்.

227. அவ்விதம் நீ தன்னடக்கத்தைப் பெற்றுக்கொண்டாயானால் அதை உன் விசுவாசத்தோடு கூட்டிக்கொள். ஆனால் இன்னுமாக நீ கோபப்பட்டு, எரிச்சலுள்ள வனாய் காணப்படுவாயானால், ஓ, உனக்கு இன்னுமாக தன்னடக்கம் வரவில்லை என்று பொருள். இதை நீ கூட்டி சேர்க்க முடியாது. ஏனெனில் அது அதனோடு சேராது. பாருங்கள்? அது அங்கு ஒட்டாது. பாருங்கள்? அது அங்கு ஒட்டாது. ஒரு சிறு ரப்பர் துண்டையெடுத்து அதனை ஒரு

இரும்புத் துண்டோடு ஒட்டவைக்க முடி யாது. அது கிரியை செய்யாது. அப்படி ஒட்ட வைக்க வேண்டுமானால் அது அந்த ரப்பரைப் போன்றே வளையக் கூடியதா யிருக்க வேண்டும். பாருங்கள்? விசுவாச மும், தன்னடக்கமும் அவரிலிருந்தபடியே, உன்னுடைய விசுவாசமும் தன்னடக்கமும் பரிசுத்த ஆவியின் தன்னடக்கமாக மாற வேண்டும்; அப்பொழுது தான் அது அவரோடு இசைந்திருக்கும். உன்னுடைய வல்லமையும், ஞானமும் அவருடையது போன்று இருக்கும் போது மட்டுமே அது கூட்டி சேர்க்கப்படும்.

இது நிகழ்ந்து எண்ணூறு ஆண்டுகள்
கழித்து, தாவீதின் குமாரன் அதே
மலையின் மேல் ஏறினவராய்,
எட்டிப்பார்த்து, புறக்கணிக்கப்பட்ட
ராஜாவாக எருசலேமை நோக்கி
அழுதார். அவர்கள் அவர் முகத்தில்
துப்பினார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-06-14M தேவன் திரைநீக்கப்படுதல்

103. அங்கு வல்லமையுள்ள தேவன் முழுகாட்சியில் நின்று கொண்டிருந்தார் - கிருபாசனம். அவருடைய சொந்த பிள்ளை கள்... "அவர் எங்களுக்கு வேண்டாம்! அவரை அகற்றும்" என்று சொல்லி அவர் முகத்தில் துப்பி கொண்டிருந்தபோது, அவர் மரித்தார்.

இதற்கு முன்னடையாளமாக, அநேக ஆண்டுகளுக்கு முன்பு தாவீது புறக்கணிக் கப்பட்ட ராஜாவாக தேவாலயத்தை விட்டுச் செல்கிறான். அவன் தெருவின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்த


போது, முடவன் ஒருவன் நகர்ந்து கொண்டு வந்து, "மாய்மாலக்காரனே" என்று அப்படி ஏதோ ஒன்றை சொல்லி நிந்தித்து அவன் முகத்தில் துப்பினான். அப்பொழுது அவனுடைய காவலாளன் பட்டயத்தை உருவி "இவன் என் ராஜா வின் முகத்தில் துப்புவதா, இந்த நாயின் தலையை நான் வாங்கிப்போடட்டும்" என்றான்.

தாவீது அவனிடம், "அவனை விட்டு விடு, அப்படி செய்யும்படி தேவன் அவனிடம் சொல்லியிருப்பார்" என்றான். தாவீது, தான் என்ன கூறினான் என்பதை ஒருக்கால் அறியாமல் இருந்திருப்பான். அவன் மலையின் மேல் ஏறி, கீழே நோக்கி, அழுதான்.

இது நிகழ்ந்து எண்ணூறு ஆண்டுகள் கழித்து, தாவீதின் குமாரன் அதே மலையின் மேல் ஏறினவராய், எட்டிப்பார்த்து, புறக்கணிக்கப்பட்ட ராஜாவாக எருசலேமை நோக்கி அழுதார். அவர்கள் அவர் முகத்தில் துப்பினார்கள்.

உங்களால் காணமுடியவில்லையா? அதே காரியம். அந்த வார்த்தை ஒவ்வொரு காலத்திலும் தொடர்ச்சியாக வந்து, இன்றைக்கும் வந்துள்ளதை பாருங்கள். அது எப்பொழுதுமே பெரும்பான்மையோரால் புறக்கணிக்கப்பட்டு, பாருங்கள், சிறுபான்மையோரால் விசுவாசிக்கப்படும்.

ஒருமுறை நீங்கள் சத்தியத்தை கேட்க நேர்ந்தால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது புறக்கணிக்க வேண்டும். வேறு வழியேயில்லை... ஆம், ஐயா ! இரண்டில் ஒன்றை நீங்கள் செய்ய வேண்டும்...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-11-24M கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

160. பிலாத்து..... பிலாத்து அவரிடம் செய்தவண்ணமாக, நீங்கள் அவரிடம் மூன்று காரியங்களைச் செய்யக்கூடும். பிலாத்து மூன்றையும் முயன்று அதை இழந்து போனான். நீங்கள் மூன்று திட்டங்களைச் செய்ய முயற்சிக்கலாம், ஆனால் அது ஒருபோதும் கிரியை செய் யாது. பிலாத்து அவனுடைய கரங்களி லிருந்து அவரை உதறப்பார்த்தான். ஆனால் ஒருமுறை உங்கள் கைகளில் ஒப்படைக்கப்படும் போது, அது உங்கள் கைகளில் உள்ளது. பிலாத்து மூன்று

வெவ்வேறு முறைகளைக் கையாள முயன்று தோல்வியடைந்தான்.

161. அவர் நமது கரங்களில் இருக்கிறார் என்னும் உண்மையை நாம் உணர வேண்டும். அவருடைய வார்த்தையில் அவரை நாம் கண்டோம். அவர் தம்மை உறுதிப்படுத்துவதை நாம் காண்கிறோம். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். அது சரியா? (சபையார் ஆமென்'' என்கின்றனர் - ஆசி) அப்படியானால் இக்காலை வேளையில் இங்குள்ள சபையோரிடம் மாத்திரம் நான் பேசவில்லை. ஒருக்கால் இங்கு அறுநூறு அல்லது எழுநூறு பேர் இருக்கக்கூடும். உலகம் பூராவும் செல்லப் போகும் இந்த ஒலிநாடாவின் மூலம் லட்சக்கணக்கானவர்களிடம் நான் பேசிக் கொண்டிருக்கி

றேன். பாருங்கள்? ஒலிநாடா செல்லும் தேசத்திலுள்ளவர்களே, நீங்கள் எங்கிருந் தாலும், அவர் உங்கள் கரங்களில் இருக் கிறார். அது உண்மையென்று உங்களுக்குத் தெரியும். தெரியாவிட்டால், நீங்கள் குருடர் களாயிருக்கிறீர்கள். நீங்கள் வார்த்தையைக் காண முடியாவிட்டால், வார்த்தையில் தேவனையும் உங்களால் காண முடியாது. அவர் உங்கள் கரங்களில் இருக்கிறார். அவரை நீங்கள் என்ன செய்யப் போகி றீர்கள்?

162. பிலாத்து அவரைக் கைகழுவப் பார்த்தான். ஆனால் நாம் உண்மையை முகமுகமாய் சந்திக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். அவன் அதைக் கேள்விப் பட்டான் என்று அறிந்திருந்தான்.

நீங்கள், ''நான் ஒன்றையும் காணவில்லை...'' எனலாம். அப்படியானால்... அதை நீங்கள் ஏதோ ஒரு விதத்தில் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், அதை இப்பொழுது கேள்விப்படுகிறீர்கள். பாருங்கள்?

அவன் இயேசு ஒரு அற்புதத்தை செய்ய வேண்டும், அல்லது ஜாலவித்தை காட்ட வேண்டுமென்று விரும்பினான். ஆனால் அவர் ஒன்றும் ஜாலவித்தை காட்டவில்லை. தேவன் செய்யக் கூறினதை மாத்திரமே அவர் செய்தார்.

163. நீங்கள் கேள்விப்பட்டீர்கள் விசுவாசம் கேள்வியினால் வரும். ''உங்களுக்கு விசுவாசம் இருந்து அதிலிருந்து விலகி... உங்கள் கரங்களிலிருந்து உதறப் பார்க்கிறீர்கள். பிலாத்து எப்படியும் உண்மையை சந்திக்க வேண்டியதாயிருந்

தது. அவன் சந்தித்தான். நாமும் கூட உண்மையை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் முழுவதுமாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு விட்டார். யோசித்து பாருங்கள் - ஒரு மனிதனின் இரத்தம் உங்கள் கரங்களில்!

164. ஒரு மனிதன், வேறொருவரின் இரத்தம் தன் கரங்களில் இருக்கும் போது, கவனமாயிருக்கவேண்டும். ஆகாய விமானத்தை பாருங்கள். விமானி விமானத்தை ஓட்டுவதற்கு முன்பு எல்லா கருவிகளையும் சரிபார்க்கிறான். ஏன்? வேறொருவரின் இரத்தம் அவன் கரங்களில் உள்ளது. ஒவ்வொரு சிறு கருவியையும் கூட அவன் சரிபார்க்கிறான். அவன் விமானத்தை திருப்பி, மோட்டாரை (என்ஜினை) போட்டு, அது சூடாகிறதா என்று பார்க்கிறான். அவன் ட்ராட்டிலை (throttle) முழு

வதும் அழுத்தி, அது மேலே செல்வதற்கு வேண்டிய காற்றை ப்ரொபெல்லருக்கு (propeller) அனுப்புகிறதா என்று பார்க்கிறான்.

உங்களில் அநேகர் ஒரு விமானத்தில் நின்றதுண்டு, அல்லது உட்கார்ந்ததுண்டு. அது ..... விமானம் முழுவதும் பூமியை விட்டு ஏறக்குறைய குலுங்குகிறது; அதில் தவறு ஏதாகிலும் உள்ளதா என்று அவன் தனக்குள்ள எல்லாவற்றைக் கொண்டும் சோதித்துப் பார்க்கிறான். அப்படி தவறு இருந்தால், அது ஓடாது. அவன் மறுபடியும் அதை சோதித்துப் பார்க்கிறான். அவன் சிறிது நேரம் அங்கு உட்கார நேர்ந்தாலும் அவன் மறுபடியும் அதை சோதித்து பார்க்கிறான். அவனுடைய நேரம் சிறிது செலவழிந்தாலும், அவன் மறுபடியும் அதை சோதித்துப்பார்க்கிறான்.

165. சபையானது எவ்வளவாக அதை மறுபடியும் மறுபடியும், மறுபடியும் சோதித்துப் பார்க்க வேண்டியதாயுள்ளது!. அவருடைய வருகைக்காக நாம் காத்திருக்கிறோம். நாம் விழித்துக் கொண்டிருக்கிறோம். நாம் பறந்து செல்ல காத்திருக்கிறோம். அதை நாம் வார்த்தையுடன் சோதித்துப் பார்ப்பது நலம். யாரோ ஒருவர் கூறினதுடன் அல்ல. உங்களை நீங்கள் அறிந்தவர்களாய், கிறிஸ்துவுடன் தனிப்பட்ட விதத்தில் அனுபவம் கொண்டிருக்க நிச்சய முடையவர்களாயிருங்கள். அதை மறுபடியும், மறுபடியும், மறுபடியும் சோதித்துப் பாருங்கள். ஏன்? அவன் மனிதனின் இரத்தத்தை தன் கரங்களில் கொண்டுள்ளதால், சோதித்துப் பார்ப்பது நலம்.

166. அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு ஒரு மருத்துவர் என்ன செய்கிறார்? இன்று காலை இங்கு சில மருத்துவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். அறுவை சிகிச்சை செய்ய செல்வதற்கு முன்பு ஒரு மருத்துவர் என்ன செய்கிறார் என்பதை கவனியுங்கள். அவர் எக்ஸ்ரே படம் வேண்டும் என்கிறார். அவர் இரத் தத்தை பரிசோதிக்க விரும்புகிறார், அவர் இருதயத்தை பரிசோதிக்க விரும்புகிறார். அவர் மயக்கம் கொடுப்பதற்கு முன்பு, உங்களுக்கு ஜலதோஷம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறார். அவர் அறுவை சிகிச்சைக்கு உபயோகிக்கும் ஒவ்வொரு கருவியையும் முழுவதுமாக சோதித்து, அதில் கிருமிகள் இராதபடிக்கு அதை தண்ணீரில் கொதிக்க வைக்கிறார். அவர் எல்லாவற்றையும் செய்கிறார். அவர்

மறுபடியும், மறுபடியும், மறுபடியும், மறு படியும் சோதிக்கிறார். ஏன்? அவருடைய கரங்களில் ஒரு மனிதனின் இரத்தம் உள்ளது. எல்லாமே மிகவும் சரியாயுள்ளது என்று அவர் முழு நிச்சயமுடையவரா யிருக்க விரும்புகிறார்.

167. உன்னைக் குறித்தென்ன? பாவியே, உன்னைக் குறித்தென்ன? இதைக் குறித்த உன் உணர்ச்சி என்ன?

ஒரு மனிதனின் இரத்தம் உன் கரங் களில் உள்ளதைக் குறித்து. விமானிக்கு பொறுப்புள்ளது, அவன் சோதித்துப் பார்க்கிறான், மருத்துவர் சோதித்துப் பார்க்கிறார். வேறு என்ன வேண்டும்? எத்தனையோ விஞ்ஞான... ஒரு மனித னின் இரத்தம் உங்கள் கரங்களில் உள்ள போது, நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு, சட்டப்புத்தகங்களை மறுபடியும், மறுபடியும், மறுபடியும், மறுபடியும் படித்து எல்லாவற்றையும் தெளிவாகக்காண்கி றார்..... அவர் தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு. ஏனெனில் ஒரு மனிதனின் இரத்தம் அவர் கரங்களில் உள்ளது. அது நியாய மென்று கருதப்பட, அங்கு ஏதாவதொன்று இருக்க வேண்டும். பாருங்கள்?

168. நம்மைக் குறித்தென்ன? அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்று முழுவதுமாக அடை யாளம் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் கண்டிருக்கிறோம். அவர் இங்கிருக்கிறார். அவர் நமது கரங்களில் இருக்கிறார். அவர் நமது கரங்களில் இருக்கிறார். அவர் உங்கள் கரங்களில் இருக்கிறார். அவரை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவாகிய இந்த இயேசுவை நான் என்ன செய்யப் போகிறேன்?

''அவர் என்ன செய்து கொண்டிருக் கிறார்? அது அவர் என்று உனக்கு எப்படித் தெரியும்?''

இந்நாளுக்கான வாக்குத்தத்தம், நாம் வாழும் இந்நாளுக்கான வாக்குத்தத்தம். இவ்வளவு வேதவாக்கியங்கள்... வேதத் தின் இவ்வளவு அங்குலங்கள் இப்பொ ழுது நிறைவேற வேண்டும் - இந்தக் கடைசி நாளில் கடைசி அங்குலங்கள். இப்பொழுது நடக்க வேண்டியதாக கருதப் படும் சில காரியங்கள் இங்கே உள்ளன. அவை இப்பொழுது நடந்து கொண் டிருக்கின்றன. அது என்ன? அதே அபி ஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து; அபி

ஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை! அதை நீ என்ன செய்யப் போகிறாய்? அதை ஸ்தா பனத்துக்கு விற்றுப்போடப் போகிறாயா?

169. இப்பொழுது, பிலாத்து என்ன செய்தான்? அவன் தன் கைகளைக் கழுவ முயன்றான்.... முதலாவதாக பிலாத்து செய்ய முயன்றது, "ஓ, அவர் சரியாகத் தான் இருக்கிறார், அவரில் ஒரு குற்ற மில்லை" என்று சொல்லி கைகளைக் கழுவு வதே. பாருங்கள்?

170. நீங்கள், "ஓ, பாவம் பிலாத்து" எனலாம். பிலாத்துவா? அவர்களில் அநேகர்.. அவன் செய்தது நியாயம் என்று கூறுவதா? இல்லை, இல்லை, இல்லை! அவர் அவன் கரங்களில் இருந்தார். அவன் செய்தியைக் கேட்டான், அவன் வார்த்தை யைக் கண்டான், அவர் அவன் கரங்களில்

இருந்தார். அது போல அவர் உங்கள் கரங்களிலும் இருக்கிறார். அது உண்மை.

அவன் என்ன செய்தான்? அவன், "ஒ, நல்லது, அவர் நல்லவர், அவரில் ஒரு குற்றமும் காணவில்லை" என்று கூறினான்

171. இன்றைக்கு அநேகருடைய பதி லும் அவ்வாறே உள்ளது என்று நினைக் கிறேன். வேதாகமம் சரிதான், ஆனால் நாங்கள் சபை கூறுவதை விசுவாசிக்கி றோம். எங்கள் ஸ்தாபனம் அதனுடன் இணங்குவதில்லை." பாருங்கள், பாருங் கள்? ஒரு வகுப்பினர் அவரைக் கைகழுவ முயல்கின்றனர்.

"நான் வார்த்தையில் ஒரு தவறையும் காணவில்லை. அது அப்போஸ்தலர்களின் நாளிற்கு சரியாயிருந்தது. நாமோ

வேறொரு நாளில் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். நாம் அப்போஸ்தலர்களின் நாளில் வாழவில்லை. எனவே அப்போஸ் தலர்கள் செய்தவிதமாக நான் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றவிதமாக நான் பெறவேண்டும் என்னும் அவசியமில்லை. நான் வேறொரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்த கூட்டத்தாருக்கு தான் பரிசுத்த ஆவி அருளப்பட்டது.

172. எபிரெயர் 13:8 மறுபடியுமாக அவரை உங்கள் கரங்களில் வைத்து விட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று தடவை தட்டுகிறார் - ஆசி)... தப்பிக்க முடியாது! அவர் முழுவதுமாக உறுதிப் படுத்தப்பட்டிருக் கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். உங்களால்

தப்பிக்க முடியாது. அவரை நீங்கள் வேறொரு காலத்துக்கு தள்ளி விட முடியாது. எபிரெயர் 13:8 உங்கள் சிந்தனைகளைக் குற்றப்படுத்தி, அவரை மறுபடியும் உங்கள் கரங்களில் சேர்க்கிறது. எனவே இயேசு பிலாத்துவின் கரங்களில் இருந்தது போல, இப்பொழுது உங்கள் கரங்களில் இருக்கிறார்.

பாருங்கள், "எனக்குத் தெரியாது'' என்று நீங்கள் கூறலாம். அப்படியானால், ஏன் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

173. பிலாத்து ஒரு அஞ்ஞானி , அவன் மனைவியும் ஒரு அஞ்ஞானி. ஆனால் தேவன் அதை நீதியுள்ளதாகச் செய்ய, அந்த ஸ்திரீயைக் கொண்டு தகவல் அனுப்பச்செய்தார். அவள் "இந்த நீதிமானை

ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்கு...'' (அது காலை, அவள் முந்தின இரவில் பாடுபட்டாள். இருபத்து நான்கு மணி நேரம் ஒரு நாளாக கணக்கிடப்படுகிறது) "அந்த நீதிமானின் நிமித்தம் இரவில் சொப்பனத்தில் வெகு வாய் பாடுபட்டேன். அவரை ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று ஆளனுப்பித் தெரிவித்தாள்.

174. பிலாத்து, "நல்லது, அப்படி யானால் என் கைகளைக் கழுவி அவரை உதறி விடுகிறேன்" என்றான். அவனால் அப்படி செய்ய முடியவில்லை .

நீங்களும் அப்படி செய்ய முடியாது. **ஒருமுறை நீங்கள் சத்தியத்தை கேட்க நேர்ந்தால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது புறக்கணிக்க வேண்டும். வேறு**

**வழியேயில்லை**... ஆம், ஐயா! இரண்டில் ஒன்றை நீங்கள் செய்ய வேண்டும்... கர்த்தருடைய எச்சரிக்கை!

175. யூதர்கள், "அவனுடைய இரத்தப் பழி எங்கள் தலையின் மேல் இருக்கட்டும். நாங்கள் எங்கள் ஆசாரியரை, எங்கள் ஸ்தாபன முறைமையை விசுவாசிப்போ மேயன்றி இவனை விசுவாசிக்க மாட் டோம்” என்று கூச்சலிட்டனர்.

பார்த்தீர்களா? இன்றைய வகுப்பின ரைப் பாருங்கள்! ஆனால் எல்லோருமே தேவனுடைய விஷயத்தை சந்திக்க வேண்டும். நீங்கள் எல்லோருமே - நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தாலும் யாராயிருந் தாலும், அவிசுவாசியாயிருந்தாலும், மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரி யன், வெதுவெதுப்பானவன், குளிர்ந்த

நிலையிலுள்ளவன், அனலுள்ளவன் யாரா யிருந்தாலும் - நீங்கள் விரும்பினாலும் விரும்பாமல் போனாலும் அந்த விஷ யத்தை எப்படியும் சந்திக்க வேண்டும். அது உங்கள் கரங்களில் உள்ளது. நிச்சய மாக.

176. அந்த விஷயத்தை தந்திரமாக மற் றொரு ராயனிடம் தள்ளி விட, பிலாத்து வின் மற்ற திட்டங்களைக் கையாளுபவர் உண்டு. பாருங்கள்?

பிலாத்து, “ஒரு நிமிடம் பொறுங்கள். எனக்கு அதனுடன் தொடர்பு கொள்ள விருப்பமில்லை. நான் - நான் - நான் - நான் - அவர் நீதிமான். அவருடன் தொடர்பு கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஓ, நான் - நான் - நான் கேள்விப்பட்டதை விசுவாசிக்கிறேன். அவர் அற்புதங்களைச்

செய்வதை நான் காணவில்லை. அவர் செய்ததைக் கண்ட அநேக சாட்சிகள் அவருக்கு உள்ளனர். அவர் நீதிமான் என்று நான் - நான் - நான் விசுவா சிக்கிறேன். அவர் நல்லவர்'' (பாருங்கள்?) ''இருப்பினும் அவருடன் எவ்வித தொடர் பும் கொள்ள எனக்கு பிரியமில்லை. என் கைகளைக் கழுவி அவரை உதறி விடு கிறேன். எனக்குத் தண்ணீர் கொண்டு வாருங்கள். நீங்கள் எல்லோரும் இதற்கு சாட்சி'', என்றான். ஆம், தேவனும் கூட அதற்கு சாட்சியாயிருந்தார்.

177. அவர் அவன் கரங்களில் இருந்தார். அவ்வாறே அவர் உங்கள் கரங்களிலும் இருக்கிறார். பாருங்கள்? நான் என்ன கூறுகிறேன் என்று உங்க ளுக்குத் தெரியும். பாருங்கள்? நீங்கள் மாத்திரமல்ல, இந்த ஒலிநாடாவைக்

கேட்பவர்களும்! அவர் உங்கள் கரங்களில் இருக்கிறார். அவரை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், கிறிஸ்து என்னப்பட்ட இந்த இயேசுவை? கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை. பாருங்கள்? அதை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அது இந்த மணி நேரத்துக்கான செய்தி. அந்த நாள் இங்குள்ளது. அது முழுவதும் வேதத்தினாலும் தேவனாலும் அங்கீகரிக்கப்பட்டது. அதைக் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இந்த விஷயத்தை நீங்கள் எப்படி ஏமாற்ற முடியும்? அப்படி செய்து விட்டு நீங்கள் எப்படி தப்ப முடியும்? அவர் உங்கள் கரங்களில் இருக்கிறார். இதனுடன் ஒப்பிடும்போது, ஆஸ்வால்டின் வழக்கு சிறியதாயிருக்கும்.

178. போதகர் எவரும், நீங்கள் யாராயிருந்தாலும்... அந்த யூதர்கள் ஆசாரியர்களும், ரபீக்களும், போதகர்களும், பரிசுத்த மனிதருமாயிருந்தனர். இருந்த போதிலும், அவர் அவர்கள் கரங்களில் இருந்தார். அவர் வார்த்தையாக, அந்த நாளில் தேவனுடைய விஷயமாக இருந்தார். அவர்களோ அதைக் காணத்தவறினர். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே அதை கண்டு கொண்டனர். அவர்கள் மாத்திரமே அதை விசுவாசித்தனர்.

179. இப்பொழுது, எல்லோருமே இந்த விஷயத்தை சந்திக்க வேண்டும். ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு முறையும் அவ்வாறே இருந்து வந்துள்ளது. ஆதாம் ஏவாள் காலம் தொடங்கி, வழிவழியாக நோவாவின் காலத்தில்; அதன்பிறகு வழிவழியாக தானியேல் (பெல்ஷாத்சார்)

நெபுகாத்நேச்சார் காலத்தில்; வழி வழியாக கிறிஸ்துவின் காலத்தில்; வழிவழியாக இப்பொழுது நாம் வாழ்ந்து கொண் டிருக்கும் இந்த மணி நேரம் வரைக்கும், அது அப்படியே இருந்து வருகிறது. வார்த்தையின் பிரச்சினை தோன்றினது - அவர்களுடைய கோட்பாடுகள், ஸ்தாப னங்கள், கொள்கைகள் அல்ல. வார்த்தை யின் பிரச்சினை எழும்பி அவைகளுக்கு விரோதமாய் இருந்து வந்துள்ளது (அது முழுவதும் சரி). இப்பொழுது அது உங்கள் கரங்களில் உள்ளது.

180. பிறகு, பிலாத்துவின் மற்ற திட்டத்தைக் கையாள முயன்றவர்கள், அவரை உதறி வேறொருவரிடம் கொடுத்து விட முயன்ற வர்கள்..... பிலாத்து, "என்ன தெரியுமா? அவரை என் கையை விட்டுப் போக்கி விடுகிறேன். அப்பொழுது நான்

.... அவரைக் குறித்து நான் ஏதாவ தொன்றை செய்ய வேண்டும். நான் என்ன செய்வேன் தெரியுமா? தலைமை அலுவல கத்துக்கு பேராயரிடம் அனுப்பி விடு வேன்'' என்றான்.

அதை தான் அவர்கள் இன்று செய்ய முயல்கின்றனர். பாருங்கள்? அவர்கள் அவரை ராயனிடம் அனுப்பினர். அது அவரை பிலாத்துவின் கைகளிலிருந்து போக்கி விடவில்லை; யாருடைய கைகளி லிருந்தும் அவரைப் போக்கி விடவில்லை. அது என்ன செய்தது? அது மீண்டும் அவனிடமே வந்தது. அந்த நபரிடம் அது திரும்ப வந்தது.

181. நீங்கள், "நான் அதை செய்வேன். என் ஸ்தாபனம் அதை ஏற்றுக் கொண்டால் நானும் ஏற்றுக் கொள்வேன்'' என்கிறீர்கள்.

உங்கள் ஸ்தாபனம் சபைகளின் ஆலோசனை சங்கத்தில் சேர்ந்து விட்டு ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அவர் கள் எப்படி அதை ஏற்றுக் கொள்வார்கள்? அது மீண்டும் உங்களிடத்திற்கே வருகிறது. உங்கள் ஸ்தாபனம் என்ன கூறுகிறது என்றல்ல, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? அவர்கள் அதைப் புறக்கணித்து விட்டனர். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அது தான் அடுத்தபடியான காரியம். பாருங் கள்? அது அவரை உங்கள் கரங்களி லிருந்து போக்கி விடாது. அவர் முழு வதுமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறார்.

பாருங்கள், கிறிஸ்துவை சேவிப்பதனால் நிந்தை உண்டாகும். இவ்வவுலகில் நீங்கள் புகழ் வாய்ந்தவராக இருந்தால், நீங்கள் கிறிஸ்துவைச் சேவிக்க முடியாது, சேவிக்கவில்லை என்று அர்த்தமாகின்றது. இல்லை, உங்களால் முடியாது. ஏனெனில், நீங்கள் பாருங்கள், அதனுடன்கூட நிந்தையும் சேர்ந்திருக்கின்றது. உலகம் எப்போதுமே நிந்தை மாத்திரமே அளிக்கும்.

செய்தி: முறையிடுகிறது என்ன? சொல்!

# தேவனை தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே




அந்நாளில் அவர் அங்கீகரிக்கும் காரியம் ஒன்றேயொன்று தான் உண்டு. அது என்ன? அதுதான் இரத்தம். கோபமுள்ள தேவனை சாந்தப்படுத்துவது இரத்தம் ஒன்றுதான்.

ஆதாமும் ஏவாளும் தங்கள் நிர்வாணத்தை மூடிட, எந்தவொரு மெதோடிஸ்ட்டும், பாப்டிஸ்ட்டும், ப்ரெஸ்பிடேரியனும் அல்லது பெந்தெகொஸ்தேகாரரும் செய்ய முடிந்திருக்கிற அளவுக்கு, ஒரு ஆடையைத் தயாரித்தார்கள். ஆனால் பார்க்கக் கூடாதபடி தேவனுடைய பார்வையை அவ்வாடை மறைக்க முடியாது. எனவே, அவர் ஒரு மிருகத்தைக்கொன்று, இறந்து போன மிருகத்தின் தோலை எடுத்து அவர்களுக்கு மூடுவித்தார். இரத்தமானது அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அதுவே அவருடைய கோபத்தை தடுத்து நிறுத்தியது. ஏனெனில் ஒன்று தனது ஜீவனை கொடுத்திருக்கிறது. ஓ தேவனே!

செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும் (61-0108)

## தேவனை தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே



அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள்! தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே. அது அவருடைய சொந்த குமாரனின் இரத்தம்தான் என்பதை அவர் காண்கிற பொழுது, நியாயந்தீர்க்க முன்வரமாட்டார். ஏனெனில் தேவன் தமது குமாரனுக்கு அளித்த ஈவாகும் அது; தாம் உலகத்தோற்ற முன்தெரிந்துகொண்டவர்களை மீட்பதற்காக அவருக்கு அவர் அளித்த ஈவாகும். அதுவே தேவனை நியாயாசனத்தில் இருந்து திரும்பக் கொண்டுவருகிறது. ஆனால் அந்த இரத்தமானது நீக்கப் பட்டபிறகு, முன்னறிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரும் விலை யேறப்பெற்ற அவருடைய சரீரத்தினுள் வந்து சேர்ந்துகொள்வதற் காக அழைக்கப்பட்டு, அவருடைய சபையானது ஆயத்தப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அப்பொழுது ஜனங்களின்மேல் தேவனுடைய கோபாக்கினையானது வருகிறது.

**ஒருபோதும் அவ்விடத்தில் நிற்க விரும்பாதீர்கள்.**

செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும் (61-0108)

# கல்வாரியில்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து